*கவனிக்க.-* 27.06.2025 ஆந் திகதிய 2443 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II (தமிழ் மொழி மூலம்) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2444 - 2025 ජූලි මස 04 වැනි සිකුරාදා - 2025.07.04**

2444 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி IV (அ) - மாகாண சபைகள்


| | பக்கம் |
|---|---|
| ஆளுநர்களின் பிரகடனங்களும் பிறவும் | - |
| ஆளுநர்களின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | - |
| மாகாண சபை அறிவித்தல்கள் | - |
| மாகாண சபையின் நானாவித அறிவித்தல்கள் | - |
| துணைவிதிகள் | - |
| பதவிகள் - வெற்றிடம் | 584 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 588 |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, யூலை மாதம் 25 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, யூலை மாதம் 11 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# பதவிகள் வெற்றிடம்

மத்திய மாகாண சபையின் அரசாங்க சேவைகள் ஆணைக்குழு

## மத்திய மாகாண அரசாங்க சேவையில் நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கான கட்டமைப்பு நேர்முகப் பரீட்சைக்காக விண்ணப்பங்கள் கோரல் – 2025

கண்டி மாநகர சபையில் நிறைவேற்று சேவை வகுதியில் சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்கு தகைமையுடைய உத்தியோகத்தரை ஆட்சேர்ப்பு செய்வதற்காக 2025.05.15 ஆந் திகதியன்று கீழ்க் குறிப்பிட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள ஆண், பெண் இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**01. தகைமைகள் :**

1.1 பொதுத் தகைமைகள் :

1.1.1. விண்ணப்பதாரர் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

1.1.2. விண்ணப்பங்கள் கோரப்படும் இறுதித் திகதிக்கு உடன் முந்திய 03 வருடங்கள் தொடர்ச்சியாக மத்திய மாகாண சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிரந்தர வதிவுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.3. சிறந்த நடத்தையுடையவராக இருத்தல் வேண்டும்.

1.1.4. ஒவ்வொரு விண்ணப்பதாரியும் மத்திய மாகாணத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றுவதற்கும் பதவியிலுள்ள கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல், உள ஆரோக்கியத்தினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

1.1.5. 2025.05.15 ஆந் திகதியன்று 25 வயதுக்கு குறையாமலும் 45 வயதுக்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். (அதாவது 2000.05.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னதாக, 1980.05.15 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு பின்னரான திகதியை பிறந்த திகதியாக கொண்ட விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பிக்கலாம். (ஏற்கனவே மாகாண அரசாங்க சேவையில் / அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ் உயர் வயதெல்லை ஏற்புடையதன்று)

1.2 கல்வித் தகைமைகள் / தொழிற்றகைமைகள் :

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றிலிருந்து சட்டம் தொடர்பான பட்டம் பெற்றிருத்தல் அல்லது உச்ச நீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்திருத்தல்.

1.3 அனுபவம்:

உச்சநீதிமன்ற சட்டத்தரணியாக சத்தியப்பிரமாணம் செய்த பின்னர் 03 வருடங்களுக்கு குறையாத தொடர்ச்சியான தொழிற்சார் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

*குறிப்பு*.- இங்கு குறிப்பிட்டுள்ள பட்டம் உள்ளடங்களான அனைத்து தகைமைகளையும் 2025.05.15 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னதாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**02. சம்பளம் :**

பொது நிருவாக சுற்றறிக்கை இல. 10/2025 இன் SL 1- 2025 சம்பள அளவுத் திட்டத்திற்கமைய மத்திய மாகாண அரசாங்க சேவையின் சட்ட அலுவலர் பதவிக்கான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் கீழ்வருமாறு

ரூபா 82, 150.00 – 10 x 2,400 – 8 x 2,940 – 17 x 3,900.00 ரூபா 195,970.00

**03. சேவை நிபந்தனைகள் :**

3.1 இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதியம் உரித்துடையதும் ஆகும்.

3.2 மத்திய மாகாண அரசாங்க சேவையில் நியமனங்கள் நிர்வகிக்கும் பொது நிபந்தனைகள் மற்றும் அரசாங்க மாகாண சபையினால் காலத்திற்கு காலம் விதிக்கப்படும் சட்டதிட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

3.3 மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் 2013.11.18 ஆம் திகதி அங்கீகரிக்கப்பட்ட மத்திய மாகாண அரசாங்க நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு திட்டத்தில் விதந்துரைக்கப்பட்டுள்ள நியதிகள் நிபந்தனைகள், அத்திட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட, இனிவரும் காலங்களில் மேற்கொள்ளப்படவுள்ள திருத்தங்களுக்கு கட்டுப்படுதல் வேண்டும்.

**04. ஆட்சேர்ப்புமுறை :**

4.1 விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் தகைமையுடைய விண்ணப்பதாரர்களுக்காக நடாத்தப்படும் கட்டமைப்பு நேர்முகப் பரீட்சையில், மத்திய மாகாண கௌரவ ஆளுநரினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள புள்ளிகள் வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் புள்ளிகள் வழங்கப்பட்டு, அதிக புள்ளிகளைப் பெற்ற விண்ணப்பதாரர் இவ்வெற்றிடப் பதவிக்கு ஆட்சேர்ப்பு செய்யப்படுவார். .
(அங்கீகரிக்கப்பட்ட புள்ளிகள் வழங்கும் திட்டம் www.psc.cp.gov,lk என்ற இணையத்தளத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ளது)

*குறிப்பு* .- தகைமைகளை உறுதிப்படுத்தும் அனைத்து சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளுடன், தேசிய ஆளடையாள அட்டை மற்றும் பிறப்புச் சான்றிதழ்களின் சான்றுப்படுத்தப்பட்ட பிரதிகளை விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.

**05. விண்ணப்பிக்கும் முறை :**

- முறையாகவும் சரியாகவும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை 2025.08.15 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் “செயலாளர், மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு, இல. 244, கடுகஸ்தோட்டை வீதி, கண்டி” என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

- விண்ணப்பத்தினை இட்டு அனுப்புகின்ற கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் “மத்திய மாகாண அரசாங்க சேவையில், சட்ட அலுவலர் பதவியில் நிலவும் வெற்றிடத்திற்காக விண்ணப்பங்கள் கோரல்” எனத் தெளிவாக குறிப்பிடல் வேண்டும்.

- விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் மற்றும் பூரணமின்றியும் கிடைக்கும் விண்ணப்பங்கள் மற்றும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியன்று அனைத்து தகைமைகளையும் பூர்த்தி செய்திறாத விண்ணப்பங்கள் எவ்வித அறிவித்தலுமின்றி நிராகரிக்கப்படும்.

- தாமதமாக கிடைக்கப் பெற்ற விண்ணப்பங்கள் மற்றும் தொலைந்த விண்ணப்பங்கள் பற்றிய முறைப்பாடுகளை மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு பொறுப்பேற்க மாட்டாது.

(மாதிரி விண்ணப்பப்படிவத்தை www.psc.cp.gov.lk என்ற இணையத்தளத்தில் பெற்றுக்கொள்ளலாம்)

06. விண்ணப்பதாரர்கள் விண்ணப்பத்தை பூர்த்தி செய்வதற்கு முன் ஆட்சேர்ப்பு அறிவிப்பை நன்றாக வாசித்து விளங்கிக் கொள்ளல் வேண்டும்.

07. இவ் ஆட்சேர்ப்பு சம்பந்தமாக இங்கு குறிப்பிடாத ஏனைய அனைத்து விடயங்கள் தொடர்பாக இறுதித் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவைச் சார்ந்ததாகும்.

08. இதன் சிங்களம், தமிழ், மற்றும் ஆங்கில மொழிகளிலுள்ள அறிவித்தலுக்கிடையில் ஏதேனும் முரண்பாடுகள் காணப்படும் பட்சத்தில் சிங்கள அறிவித்தலே மேலோங்குதல் வேண்டும்.

அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

சுஜானி ஆர். விஜேதுங்க,
செயலாளர் (பதில்),
மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
மத்திய மாகாண சபை.

மத்திய மாகாண அரசாங்க சேவைகள் ஆணைக்குழு,
இல. 244, கடுகஸ்தோட்டை வீதி,
கண்டி,
2025, யூன் 24.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மத்திய மாகாண அரசாங்க சேவையில் நிறைவேற்று சேவை வகுதியின் சட்ட அலுவலர் தரம் III இற்கு ஆட்சேர்ப்பு செய்தல் – 2025**

இலக்கம் : [ ]

வதிவிட மாவட்டம் : [ ] (அலுவலக உபயோகத்திற்கு)

01.

1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
Mr./Mrs./Miss (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) (உதா:- SILVA A.B.C.D.) ..........................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் : ..........................................................................
திரு./திருமதி/செல்வி (சிங்களம்/தமிழில்) ..........................................................................

1.3 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ..............................................................
......................................................................................................................................................................

1.4 முதலெழுத்துக்களால் குறிக்கப்படும் பெயர் (சிங்களம்/தமிழில்) : .........................................................................
......................................................................................................................................................................

02.
2.1 நிரந்தர முகவரி (சிங்களம்/தமிழில்): ..........................................................................................................
......................................................................................................................................................................

2.2 அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி (சிங்களம்/தமிழில்) : ..............................................................
......................................................................................................................................................................

2.3 அழைப்புக் கடிதம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிட்டல் எழுத்தில்) : ...............................................
......................................................................................................................................................................

2.4 தற்போது அரசாங்க சேவையில் உள்ளவராயின் அலுவலக முகவரி : ...............................................................
......................................................................................................................................................................

2.5 தேசிய ஆளடையாள அட்டை இல : ☐☐☐☐☐☐☐☐☐☐☐☐

2.6 பால்:- 0 - ஆண் , 1- பெண் ☐

03.
3.1 பிறந்த திகதி : ☐☐☐☐☐☐☐☐

3.2 தகைமைகளைப் பரீட்சிக்கும் இறுதித் திகதியன்று (2025.05.15) வயது :

வருடங்கள்: ………………….. மாதங்கள் ……………. நாட்கள் ………..

3.3 கையடக்கத் தொலைபேசி இலக்கம் : ☐☐☐☐☐☐☐☐☐☐

04. திருமண நிலை : ☐

திருமணமாகாதவர் - 1 திருமணமானவர் - 2 (உரிய இலக்கத்தை கூட்டினுள் இடவும்)

05.
5.1 விண்ணப்பதாரரின் நிரந்தர வதிவிட மாவட்டம் : ..................................................

| வாக்காளர் இடாப்பு பட்டியலின் அடிப்படையில் | 2022 | 2023 | 2024 |
|---|---|---|---|
| தேர்தல் மாவட்டம் | | | |
| தேர்தல் தொகுதி | | | |
| வாக்காளர் பிரிவு | | | |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு இல. | | | |
| வீட்டு இல. | | | |
| பெயருக்கு முன்னாலுள்ள தொடரிலக்கம் | | | |

06.
6.1 கல்வித் தகைமைகள் :

| *பல்கலைக்கழகம்/ நிறுவனத்தின் பெயர்* | *பெற்றுள்ள பட்டம் அல்லது சித்தியடைந்த பரீட்சை* | *பட்டம் அல்லது குறித்த பரீட்சையில் கற்ற பாடங்கள்* | *பெற்ற வகுப்புத் தேர்ச்சி* | *சான்றிதழ் இலக்கமும் பட்டம் அல்லது சித்தி யடைந்த பரீட்சையின் செல்லுபடியாகும் திகதியும்* |
|---|---|---|---|---|
| | | | | |

6.2 ஏனைய தொழில்சார் தகைமைகள் : ....................................................................................................................
....................................................................................................................................................................
....................................................................................................................................................................

6.2 சட்டத் துறையில் பெற்ற அனுபவ விவரங்கள் : ...................................................................................................
....................................................................................................................................................................
....................................................................................................................................................................

07. விண்ணப்பதாரர் புரியும் தொழில் தொடர்பான விபரங்கள் (பொருத்தமெனின்) :

7.1 பதவிப் பெயர் : ..................................................
7.2 நிரந்தரமானதா/ தற்காலிகமானதா என்பது தொடர்பாக : ..................................................
7.3 ஓய்வூதியம் உரித்துடையதா/ உரித்தற்றதா என்பது தொடர்பாக : ..................................................
7.4 சேவையில் உறுதிப்படுத்தப்பட்டுள்ளீரா? : ..................................................
7.5 தற்போதைய சேவை நிலையம் : ..................................................
7.6 மாதாந்தச் சம்பளம் : ..................................................

08. நீதிமன்றமொன்றில் ஏதாவது தவறுக்காகக் தண்டனை பெற்றுள்ளீரா ? ஆம்/ இல்லை
ஆம் எனில், விபரங்களைக் குறிப்பிடவும். .............................................................................

09. விண்ணப்பதாரியின் உறுதியுரை

இவ்விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் எனது அறிவிற்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானவை எனவும் சரியானவையெனவும் தெரிவித்துக்கொள்கிறேன். இதில் உள்ளடக்கப்பட்டுள்ள ஏதாவது விபரங்கள் பொய்யானதாக அல்லது தவறாகக் காணப்படுமிடத்து நியமனத்திற்கு முன்னர் நான் தகுதியற்றவனாவேன் என்றும் நியமனத்திற்கு பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையில் இருந்து விலக்கப்படுவதற்கு ஆளாவேன் என்றும் நான் அறிவேன்.

..............................................
விண்ணப்பதாரியின் கையொப்பம்

...................................
திகதி

10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தினை உறுதிப்படுத்தல்

இந்த விண்ணப்பத்தினைச் சமர்ப்பிக்கும் திரு./ திருமதி/ செல்வி ......................................................................... என்பவர் தனிப்பட்ட முறையில் எனக்குத் தெரிந்தவர் எனவும் இன்றைய திகதி அவர் என் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டார் எனவும் இத்தால் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

**குறிப்பு.** - விண்ணப்பதாரரின் கையொப்பமானது அரசாங்க பாடசாலை அதிபர், உரிய பிரிவின் கிராம அலுவலர், சமாதான நீதவான், சத்தியப் பிரமாண ஆணையாளர், சட்டத்தரணி, பிரசித்தி பெற்ற நொத்தாரிசு, முப்படைகளின் கட்டளை அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர், 498, 960.00 ரூபாவுக்கு கூடிய ஆண்டுச் சம்பளத்தை பெறும் அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையில் நிரந்தர பதவி நிலை உத்தியோகத்தர் அல்லது பௌத்த விகாராதிபதி, மகாநாயக்கர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள் அல்லது மதத் தலைவராகக் கருதப்படும் ஒருவரினால் சான்றுப்படுத்தப்படல் வேண்டும்.

……………………………………………
அத்தாட்சிப்படுத்தியவரின் கையொப்பம்.

அத்தாட்சிப்படுத்தியவரின் முழுப்பெயர் : ……………………………
பதவி : ……………………………………………
முகவரி : ……………………………………………
திகதி : …………………………………
(உத்தியோக முத்திரையால் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

11. தற்போது அரசாங்க அல்லது மாகாண அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தமது கையொப்பத்தை திணைக்களத் தலைவர் மூலம் உறுதிப்படுத்த வேண்டும்.

இவ்விண்ணப்பதாரியான திரு./திருமதி/செல்வி........................................................................................ என்பவர் இத்திணைக்களத்தில்/ நிறுவனத்தில் ................................................................... ஆக கடமையாற்றுகிறார். கடந்த 05 வருட காலப்பகுதியில் அவர் எந்த விதமான ஒழுக்காற்று தண்டனைகளுக்கும் (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என்பதை தெரிவிப்பதுடன் மேற்குறிப்பிடப்பட்டுள்ள பதவிக்கு தேர்ந்தெடுக்கப்படின் அவரை தற்போது வகிக்கும் பதியிலிருந்து விடுவிக்க முடியும் என்றும் ஒப்புதல் அளிக்கின்றேன்.

.....................................................
திணைக்கள/ நிறுவனத் தலைவரின் கையொப்பம்.
(உத்தியோகபூர்வ முத்திரை)

திகதி : .................................

07 - 551

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு**

வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கை தொழில்நுட்ப சேவையில் தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) / திட்டமிடல் கலைஞர் பதவிக்கு நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025

வடமேல் மாகாண அரசாங்க சேவையில் இலங்கை தொழில்நுட்ப சேவையில் பின்வரும் பதவிகளில் நிலவுகின்ற வெற்றிடங்களை நிரப்புவதற்கு வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டுள்ள பெண் / ஆண் ஆகிய இருபாலாரிடமிருந்தும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

| *குறியீட்டு எண்* | *பதவிப் பெயர்* | *ஆட்சேர்ப்பு செய்யப்படும் அடிப்படை* |
|---|---|---|
| 01 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் சிவில் (III) | நிரந்தர அடிப்படையில் |
| 02 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம் | ஒரு வருட பயிற்சியின் பின்னர் நிரந்தர அடிப்படையில் |
| 03 | தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) இரண்டு வருட பயிற்சித் தரம் | இரண்டு வருட பயிற்சியின் பின்னர் நிரந்தர அடிப்படையில் |
| 04 | திட்டமிடல் கலைஞர் ஒரு வருட பயிற்சித் தரம் | ஒரு வருட பயிற்சியின் பின்னர் நிரந்தர அடிப்படையில் |

** மேலே உள்ள குறியீட்டு எண் 01 இன் கீழ் தகுதியான விண்ணப்பதாரர்கள் போதுமான எண்ணிக்கையில் இல்லாவிட்டால், வாய்ப்பு எண் 02 க்குச் செல்லும். 01 மற்றும் 02 க்கு தகுதியான விண்ணப்பதாரர்களின் மொத்த எண்ணிக்கை போதுமானதாக இல்லாவிட்டால், வாய்ப்பு எண் 03 க்குச் செல்லும்.

இப்பரீட்சை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2025 ஓகத்து மாதம் குருநாகல் நகரில் அமைக்கப்படும் பரீட்சை நிலையமொன்றில் நடாத்தப்படும் என்பதனை இத்தால் அறியத்தரப்படுகின்றது. இப்பரீட்சையை பிற்போடுவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரம் உண்டு.

**01. கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் :** மேலே குறிப்பிடப்பட்டுள்ள சகல பதவிகளுக்கும் -

(அ) கல்வித் தகைமைகள் :

பௌதீகவியல் மற்றும் கணிதம் ஆகிய பாடங்களுடன் கணிதப் பாடவிதானத்தைச் சேர்ந்த பாடங்கள் மூன்றுடன் கூடிய கல்விப் பொதுத் தராதரப் பாத்திர (உயர் தரம்) பரீட்சையை ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல்.

அல்லது

தொழில்நுட்பவியல் பாட விதானத்தின் பொறியியல் தொழில்நுட்பவியில், தொழில்நுட்பத்திற்கான விஞ்ஞானம் உள்ளிட்ட பாடங்கள் மூன்றில் க. பொ. த. (உயர் தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் சித்தியெய்திருத்தல்.

மற்றும்

சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழி, விஞ்ஞானம், கணிதம் மற்றும் உள்ளடங்கலாக மேலும் ஒரு பாடத்தில் திறமைச் சித்தியுடன் ஒரே தடவையில் ஆறு (06) பாடங்களில் க.பொ.த. (சா.த) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

*க.வே.* - மேற்கூறிய கல்வித் தகைமைகளுடன் ஒவ்வொரு பதவிக்குமான தொழிற் தகைமைகளையும் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

(ஆ) தொழிற் தகைமைகள்:-

| *பதவிப் பெயர்* | *தொழிற் தகைமைகள்* |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தரம். | மொரட்டுவ பல்கலைக்கழகத்தில் அல்லது அம்பாறை ஹாடி நிறுவனத்தினால் பதவிக்குரிய துறையில் பாடநெறியொன்றினைப் பயின்று தேசிய தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>தேசிய பயிலுநர் மற்றும் கைத்தொழிற் பயிற்சி அதிகார சபையினால் பதவிக்குரிய துறையில் பாடநெறியொன்றினைப் பயின்று தேசிய பொறியியல் தேசிய டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சினால் பதவிக்கு உரித்தான துறையில் பாடநெறியொன்றைப் பயின்று தேசிய உயர் பொறியியல் டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தினால் பதவிக்குரிய துறையில் பாடநெறியொன் றினைப் பயின்று தொழில்நுட்ப டிப்ளோமா சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>இலங்கை பொறியியல் நிறுவனத்தினால் நடாத்தப்படும் பதவிக்கு உரித்தான துறையில் பொறியியல் பரீட்சையின் 1 ஆம் பகுதியை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல்.<br><br>அல்லது<br><br>தொழிற்துறைக்கு உரித்தான தேசிய தொழிற் தகைமையின் (NVQ) 06 ஆம் மட்டத்துடைய தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல்.<br><br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில் நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களுடன் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக் குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம் | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியில் பதவியுடன் தொடர்புடைய துறையில் பாடநெறியொன்றை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |

| | |
|---|---|
| தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) இரண்டு வருட பயிற்சித் தரம் | - தொழிற் தகைமைகள் ஏற்புடையதற்றது - |
| திட்டமிடல் கலைஞர் (ஒரு வருட பயிற்சித் தரம்) | மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழு அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரியொன்றில் திட்டமிடல் கலையுடன் தொடர்பான ஒரு வருட முழு நேர கால பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து உரிய சான்றிதழைப் பெற்றிருத்தல்.<br><br>அல்லது<br><br>உயர் கல்வி அமைச்சு மற்றும் மேலே குறிப்பிடப்பட்டுள்ள தொழில்நுட்ப சான்றிதழ்களை வழங்கும் நிறுவனங்களின் கருத்துக்களைப் பெற்றுக் கொண்ட பின்னர் மேற்கூறிய தொழில்நுட்ப தகைமைகளுக்கு எல்லா வகையிலும் சமமானதாக உள்ளதா என்பது பற்றி மூன்றாம் நிலை மற்றும் தொழிற்கல்வி ஆணைக்குழுவினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஏனைய தொழில்நுட்ப தகைமையைப் பெற்றிருத்தல். |

*க.வே.-*
மேற்படி சகல கல்வித் தகைமைகள் மற்றும் தொழிற் தகைமைகள் 2025.07.15 ஆந் திகதிக்கு முன் அல்லது அன்றைய தினம் முழுமைப்படுத்தி சான்றிதழைப் பெற்றிருத்தல் வேண்டும்.

**02. ஏனைய தகைமைகள் :**

2.1 விண்ணப்பதாரி இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும் என்பதோடு, நன்னடத்தை உடையவராக இருத்தல் வேண்டும்.

2.2 எல்லா விண்ணப்பதாரர்களும் வடமேல் மாகாணத்தினுள் எந்தவொரு பகுதிகளிலும் சேவையாற்றுவதற்கும், பதவியின் கடமைகளை நிறைவேற்றுவதற்கும் போதுமானளவு உடல், உள தகுதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

2.3 விண்ணப்பதாரி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு அண்மிய 03 வருட காலமாவது வடமேல் மாகாண அதிகாரப் பிரதேசத்தினுள் நிரந்தர வசிப்பாளர் என்பதை கிராம அலுவலரினால் வழங்கப்படும் வதிவிடச் சான்றிதழ் (DS-04 கிராம அலுவலர் சான்றிதழ்) மூலம் நேர்முகப்பரீட்சையின் போது உறுதிப்படுத்த வேண்டும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் விண்ணப்பதாரிகளும் DS 04 கிராம அலுவலர் சான்றிதழ் மூலம் தாங்கள் வசித்து வரும் காலம் உறுதிசெய்யப்பட வேண்டும்.

2.4 விண்ணப்பதாரி விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் இறுதித் திகதிக்கு 03 வருடங்களுக்கு குறைவான காலம் வடமேல் மாகாணத்தில் குடியிருப்பாளராக இருக்கும் சந்தர்ப்பத்தில், விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணை அண்மிய 03 ஆண்டுகளில் வடமேல் மாகாணத்தில் நிரந்தர வதிவைக் கொண்டிருந்தால், அவ்விண்ணப்பதாரிகள் தொடர்பில் மேற்படி 2.3 ஆம் பிரிவின் படி கவனத்திற் கொள்ளப்படுவார்கள். வாழ்க்கைத் துணையின் வதிவிடச் சான்றிதழ் (DS 04) மற்றும் விவாகச் சான்றிதழை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பித்தல் வேண்டும்.

2.5 குறித்த பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டால் குறைந்தபட்சம் 10 வருடங்கள் வடமேல் மாகாணத்தினுள் சேவையாற்றுதல் வேண்டும்.

2.6 2025.07.25 ஆந் திகதிக்கு 18 வயதுக்கு குறையாமலும் 35 வயதுக்கு மேற்படாதிருத்தலும் வேண்டும்.

*குறிப்பு :* ஏதேனும் சமயப் பிரிவொன்றின் துறவிப் பதவியை வகிக்கும் ஒருவர் இப்பரீட்சைக்கு தோற்றுவதற்கு தகைமை அற்றவராவார்.

**03. சம்பள அளவுத்திட்டம் :**

3.1 தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்)

இப்பதவிக்கு உரிததான மாதாந்த சம்பள அளவுத்திட்டம் 2025.01.01 ஆந் திகதிய மற்றும் 10/2025 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை அட்டவணை I இன் MN 3 -2025 இன் பிரகாரம்,

ரூபா 52,250.00 - 10x800 - 11x1190 - 10x1320 - 10x1350 - ரூபா 100,040.00 ஆகும்.

(2027.01.01 ஆந் திகதி வரை இந்தச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் படி அவ் அட்டவணை II இல் குறிப்பிடப்பட்டுள்ள பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.)

3.2 திட்டமிடல் கலைஞர் - ஒரு வருட பயிற்சித் தரம்

அ.நி.சு. 10/2025 இன் அட்டவணை இலக்கம் VI இன் படி பயிற்சியளிக்கும் தரத்திற்கு உரித்தான மாதாந்த கொடுப்பனவு ரூபா. 41,317.00 ஆன தொகையில் ஆரம்பித்து தொடர்ந்து கொடுப்பனவு வழங்கப்படும் என்பதோடு, பயிற்சிக் காலத்தின் முடிவில் III ஆந் தரத்திற்கு நியமனம் பெற்றதன் பின்னர் மேற்படி 3.1 இல் குறிப்பிடப்பட்டுள்ள MN 3 - 2025 இற்கு உரித்தான சம்பள அளவுத்திட்டத்தின் பிரகாரம் சம்பளம் வழங்கப்படும்.

**04. சேவை நிபந்தனைகள் :**

4.1 இந் நியமனம் நிரந்தரமானது. சேவைக்குரித்தான ஓய்வூதியத் திட்டம் தொடர்பில் அரசாங்கத்தினால் எதிர்காலத்தில் எடுக்கப்படும் கொள்கைசார் தீர்மானங்களுக்கு உட்பட்டதாகும்.

4.2 இப்பதவிக்கு நியமிக்கப்படுவது, மூன்று (03) வருட கால தகுதிகாண் காலத்திற்கு உட்பட்டதாகும் என்பதோடு, அவர் தகுதிகாண் காலத்தினுள் தமது கடமைகள் மற்றும் நடத்தை திருப்திகரமானதாக பேணிச் செல்லப்பட்டிருப்பின் மற்றும் முதலாம் வினைத்திறன்காண் தடைதாண்டல் பரீட்சையில் சித்தியெய்திருப்பின் மற்றும் பிற சேவையில் உறுதிப்படுத்துவதற்கான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்திருப்பின் தகுதிகாண் காலம் நிறைவுற்றவுடன் சேவையில் உறுதிப்படுத்தப்படுவார்.

4.3 அரசகரும மொழி அல்லாத மொழி மூலம் ஒன்றினால் சேவையில் இணைந்து கொண்ட உத்தியோகத்தர்களினால் உரிய அரசகரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்தினுள் பெற்றிருத்தல் வேண்டும்.

4.4 2020.10.16 ஆந் திகதிய பொது நிர்வாக சுற்றறிக்கை இலக்கம் 18/2020 மற்றும் அதற்கு நேரிடையான சுற்றறிக்கைகளுக்கு அமைவாக நியமனம் பெற்று 03 வருடங்கள் கடந்து செல்ல முன் சேவையில் இணைந்து கொண்ட மொழி ஊடகத்திற்கு மேலதிகமாக பிற அரசகரும மொழி / மொழிகள் தொடர்பான தேர்ச்சியை உரிய மட்டத்தில் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4.5 III ஆந் தரத்தில் 05 வருடத்தை தாண்டுவதற்கு முன்னர் ஆங்கில மொழியில் க.பொ.த. (சா.தரம்) திறமைச் சித்தி மட்டத் தேர்ச்சியினைப் பெற்றிருத்தல் வேண்டும்.

4.6 இந்தப் பதவிக்கு ஆட்சேர்ப்புச் செய்தல் / பதவி உயர்வு வழங்கும் நடைமுறை ஒழுங்கு விதி மற்றும் அதற்கமைய ஒப்படைக்கப்படும் பொறுப்புக்களுக்கு மேலதிகமாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் நடைமுறை ஒழுங்கு விதிகள், வடமேல் மாகாண சபைகள் நிதி ஒழுங்கு விதிகளுக்கும், ஒழுக்காற்று நடவடிக்கை சட்டக் கோவைகளுக்கும், திணைக்கள கட்டளைகளுக்கும், வடமேல் மாகாண சபைகள் தொழில்நுட்ப சேவையின் சேவைப் பிரமாணத்திற்கும், அரசாங்க மற்றும் வடமேல் மாகாண சபை மூலம் வெளியிடப்பட்டுள்ள மற்றும் அவ்வப்போது விதிக்கப்படும் ஏனைய ஏற்பாடுகளுக்கும் மற்றும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு சகல உத்தியோகத்தர்களும் கடப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டும்.

**05. இரு வருடப் பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்களுக்கான விசேட நிபந்தனைகள் :**

5.1 பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுகின்ற உத்தியோகத்தர்கள் சேவையில் நிரந்தரப்படுத்துவதற்காக பிற நிபந்தனைகளுக்கு மேலதிகமாக பின்வரும் தொழிற் தகைமைகள் முழுமைப்படுத்தியிருத்தல் வேண்டும்.

பயிற்சித் தரத்திற்கு நியமனம் பெற்று 04 வருடங்களினுள் மூன்றாம் நிலை மற்றும் தொழிற் கல்வி ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்பவியல் கல்லூரி ஒன்றில் பதவியுடன் தொடர்புடைய துறையில் வார இறுதி நாட்களைக் கொண்ட 03 வருட பாடநெறியை வெற்றிகரமாக பயின்று தேசிய தொழில்நுட்ப சான்றிதழைப் பெற்றிருத்தல். (உ.தா: தேசிய தொழில்நுட்ப சான்றிதழ் சிவில்)

அல்லது

பயிற்சி தரத்தில் இணைத்துக் கொள்ளப்படும் உத்தியோகத்தர்கள் வடமேல் மாகாண சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் ஒன்றினால் பதவியுடன் தொடர்புடைய துறையில் வதிவிடப் பயிற்சிப் பாடநெறியை வெற்றிகரமாக பயின்று NVQ 5 சான்றிதழைப் பெற்றிருத்தல். (இந்த வதிவிடப் பயிற்சிப் பாடநெறியைப் பயில்வதற்கு முன்னர் குறித்த திணைக்களத் தலைவருடன் உடன்படிக்கையொன்றில் கைச்சாத்திடல் வேண்டும்)

**06. ஆட்சேர்ப்பு முறை :**

6.1 எழுத்துப் போட்டிப் பரீட்சை மற்றும் சாதாரண நேர்முகப் பரீட்சைப் புள்ளிகளின் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படுவர். பரீட்சைப் பாடத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு வினாத்தாளிலும் 40% அல்லது அதற்கு மேற்பட்ட புள்ளிகளைப் பெற்று எழுத்துப் பரீட்சையில் சித்தியெய்துள்ள விண்ணப்பதாரிகளின் மொத்தப் புள்ளிகளின் திறமையின் ஒழுங்குவரிசையின் படி முன்னுரிமைப் பட்டியல் தயாரிக்கப்படும். முன்னுரிமைப் பட்டியலின் ஒழுங்கிற்கு ஏற்ப ஆட்சேர்ப்புச் செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்ற எண்ணிக்கைக்குச் சமனான எண்ணிக்கையினர் சாதாரண நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு தகுதியானவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். உரிய கல்வி மற்றும் தொழிற் தகைமைகளைக் கொண்டுள்ள விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை வெற்றிட எண்ணிக்கையினை விடக் குறைவாக இருப்பின் அவர்களுக்கு எழுத்துப் பரீட்சையின்றி நேர்முகப் பரீட்சையின் மூலம் மாத்திரம் இணைத்துக் கொள்ளப்படுவார்கள்.

6.2 நேர்முகப் பரீட்சைக்கு புள்ளிகள் வழங்கப்படுவதில்லை என்பதோடு கல்வி, தொழிற்கல்வி உள்ளிட்ட அடிப்படை தகைமைகளைப் பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் உடற் தகைமைகளும் பரீட்சித்துப் பார்க்கப்படும்.

6.3 III ஆந் தரத்திற்கு நேரடியாக ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் போதுமானளவு எண்ணிக்கையினர் தகுதி பெற்றுள்ள போது III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள்.

6.4 III ஆந் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்குப் போதுமானளவு எண்ணிக்கையினர் தகுதி பெற்றிராத போது எஞ்சிய வெற்றிடங்களை நிரப்புவதற்காக ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அவ்வாறு இணைத்துக் கொள்ளப்படுகின்ற விண்ணப்பதாரிகள் ஒரு வருட பயிற்சிக் காலப்பகுதியினை வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்ததன் பின்னர் III ஆந் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

6.5 ஒரு வருட பயிற்சித் தரத்திற்கு இணைத்துக் கொள்ளப்பட்டதன் பின்னர் தொடர்ந்தும் வெற்றிடங்கள் நிலவினால் இரண்டு வருட பயிற்சித் தரத்திற்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படுவார்கள். அவ்விண்ணப்பதாரிகள் இரண்டு வருட பயிற்சிக் காலப்பகுதியினுள் வெற்றிகரமாக நிறைவு செய்ததன் பின்னர் வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்ததன் பின்னர் III ஆந் தரத்திற்கு நியமனம் செய்யப்படுவார்கள்.

குறிப்பு : மேற்படி பயிற்சிக் காலப் பகுதியின் முடிவில் நடாத்தப்படுகின்ற பரீட்சையில் சித்தியெய்துவதற்கு தவறுகின்ற பயிலுநர்கள் இருப்பின் அவர்களுக்கு ஆறு (06) மாதங்களுக்கு மேற்படாத காலத்திற்கு தங்களது பயிற்சிக் காலத்தை நீடிப்புச் செய்ய வாய்ப்பளிக்கப்படுகின்றது. அவ்வாறு நீடிக்கப்படும் காலப்பகுதியின் இறுதியில் மீண்டும் நடாத்தப்படும் பரீட்சையில் சித்தியடையாத பயிலுநர்களின் சேவை முடிவுறுத்தப்படும்.

**07. எழுத்துப் பரீட்சை :**

7.1 எழுத்துப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி மூலங்களில் மாத்திரம் நடைபெறும் என்பதோடு, விண்ணப்பிக்கும் மொழி மூலத்தை பின்னர் மாற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

7.2 இப்பரீட்சையானது இரு வினாப் பத்திரங்களைக் கொண்டதாக அமையும். விரிவான பரீட்சைப் பாடத் திட்டங்கள் பின்வருமாறு அமைந்துள்ளது.

7.3 இரண்டு வருட பயிற்சித் தரத்திற்கு விண்ணப்பிப்பவர்கள் விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சையில் தோற்றுவது அவசியமில்லை.

| *வினாப் பத்திரம்* | *நேரம்* | *மொத்தப் புள்ளிகள்* | *சித்தியடையவதற்கு பெறப்பட வேண்டிய புள்ளிகள்* |
|---|---|---|---|
| 1. நுண்ணறிவுத் தேர்வு | 01 மணித்தியாலம் | 100 | 40% |
| 2. விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை | 03 மணித்தியாலங்கள் | 100 | 40% |

**பாடத்திட்டம் :**

(01) நுண்ணறிவுத் தேர்வு :

விண்ணப்பதாரியின் மொழித் தேர்ச்சி, கணிதத் திறன் மற்றும் தர்க்கத் திறனை அளவிட்டுப் பார்ப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள குறுகிய மற்றும் பல்தேர்வு கட்டமைப்புடைய வினாக்களைக் கொண்டுள்ளது.

(02) விடயத்துடன் தொடர்புடைய தொழில்நுட்ப பரீட்சை

(அ) தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) III ஆந் தரம், தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) ஒரு வருட பயிற்சித் தரம்

கட்டிட நிர்மானம் பற்றிய கோட்பாடுகள், கட்டுமானப் பணிகளுக்கான வரைபடங்களைத் தயாரித்தல் மற்றும் அவற்றினை படித்துப் புரிந்துகொள்ளும் திறன், மதிப்பீடுகளைத் தயாரிக்கும் திறன், நீர் வழங்கல், வடிகாலமைப்பு நடவடிக்கைகள் மற்றும் கழிவுகளை அகற்றும் நடைமுறைகள் பற்றிய அறிவை பரீட்சார்த்தியிடம் காணப்படுகின்ற பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய திறன்களை மதிப்பிடுவதற்காக இந்த வினாக்கள் வடிவமைக்கப்பட்டுள்ளன.

(ஆ) திட்டமிடல் கலைஞர் - ஒரு வருட பயிற்சித் தரம்

கட்டட நிர்மாண தொழில்நுட்பம் தொடர்பான அறிவு, அளவுக்கு ஏற்ப வரைதல், திட்டம் அல்லது மாதிரித் திட்டக் குறிப்பு ஒன்றை விளங்கிக் கொள்ளும் ஆற்றல், கட்டமைக்கப்பட்ட நிர்மாணங்கள் தொடர்பிலான அடிப்படை அறிவு, கணிப்பீடுகள் தொடர்பான அறிவு, வடிவியல் மற்றும் எந்திரவியல் தொடர்பான அடிப்படை அறிவைப் பரீட்சித்துப் பார்ப்பதற்கான வினாக்களை உள்ளடக்கியிருக்கும்.

**08.பரீட்சைக் கட்டணம் :**

பரீட்சைக் கட்டணமாக ரூபா 1,200.00 ஆன தொகையை வடமேல் மாகாண சபையின் 2003-02-13 ஆம் இலக்க வருமானத் தலைப்பில் வரவு வைக்கப்படுமாறு வடமேல் மாகாண சபையின் எந்தவொரு பிரதேச செயலகத்திலும் பணம் செலுத்தி தனது பெயரில் பெற்றுக்கொள்ளும் வ.மே.மா.ச.நி. 02 ஆம் பற்றுச்சீட்டினை விண்ணப்பப்படிவத்தின் உரிய இடத்தில் ஒட்டி சமர்ப்பித்தல் வேண்டும். வ.மே.மா.ச.நி. 02 ஆம் படிவப் பற்றுசீட்டினைத் தவிர, வேறு பற்றுச்சீட்டுக்கள் மற்றும் காசுக் கட்டளைகள் அல்லது பணம் எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது என்பதுடன், அவ்வாறான பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிக்கும் விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும், ஏதேனும் ஒரு காரணத்தினால் அல்லது செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணம் மீளச் செலுத்தப்பட மாட்டாது எனவும், அப்பரீட்சைக் கட்டணம் வேறு எந்தவொரு அல்லது பரீட்சைக்கும் மாற்றுவதற்கு இடமளிக்கப்பட மாட்டாது எனவும் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும். (பணம் செலுத்தப்பட்ட பற்றுச்சீட்டின் நிழற்பிரதியை தம் வசம் வைத்திருப்பது எதிர்காலத்தில் பிரயோசனப்படும்.)

**09. விண்ணப்பிக்க வேண்டிய நடைமுறை :**

9.1 இவ்வறிவித்தலின் முடிவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்தின் பிரகாரம் A4 அளவுடைய கடதாசியின் இரு பக்கங்களையும் பயன்படுத்தி விண்ணப்பப்படிவம் தயாரிக்கப்படுதல் வேண்டும். பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவங்களை 2025.07.25 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் "செயலாளர், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழு, வடமேல் மாகாண சபை கட்டிடத் தொகுதி, குருநாகல்" என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை இட்டு அனுப்பும் கடித உறையின் மேல் இடதுபக்க மூலையில் "தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்), திட்டமிடல் கலைஞர் பதவிக்கு உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025" எனக் குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும்.

9.2 உரிய மாதிரிப்படிவத்துக்கு ஏற்புடையதற்ற அல்லது உரிய திகதிக்கு முன் பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படாத அல்லது தாமதமாக கிடைக்கப்பெறுகின்ற அல்லது தெளிவற்ற மற்றும் சரியாக பூர்த்தி செய்யாத விண்ணப்பங்களும் எவ்வித அறிவிப்புக்களும் இன்றி நிராகரிக்கப்படும். மேலும் பூரணப்படுத்தப்பட்டுள்ள விண்ணப்பப்படிவம் பரீட்சை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்கியதாக தயாரிக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி ஆராய்வது விண்ணப்பதாரியின் பொறுப்பாகும். முறையாக விண்ணப்பப்படிவங்களை பூரணப்படுத்தாமையினால் ஏற்படக்கூடிய நட்டங்களை விண்ணப்பதாரியே பொறுப்பேற்றுக் கொள்ளல் வேண்டும். விண்ணப்பப்படிவத்தின் நிழற் பிரதியை தம் வசம் வைத்துக் கொள்வது பிரயோசனப்படும். விண்ணப்பப்படிவங்கள் கிடைக்கப்பெற்றமை பற்றி அறியத்தரப்பட மாட்டாது.

9.3 விண்ணப்பத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கல்வித் தகுதிகளை நிரூபிக்க, அந்தந்த சான்றிதழ்களின் சான்றளிக்கப்பட்ட நகல்கள் இணைக்கப்பட வேண்டும்.

9.4 விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 2025.07.25 ஆகும்.

**10. விண்ணப்பதாரியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல்:**

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற நிறுவனத் தலைவர்/ பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர், அல்லது ரூ. 71,240.00 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும் நிரந்தரமான அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

11. விண்ணப்பப்படிவங்களை நிரப்பும் போது சரியான தகவல்களை வழங்குவது தொடர்பில் கூடுதலான கவனம் செலுத்துதல் வேண்டும். அத்தகவல்களை எவ்விதத்திலும் திருத்தியமைப்பதற்கு இடமளிக்கப்பட மாட்டாது. இப்பரீட்சையின் ஒழுங்கு விதிகளுக்கு இணங்க எவரேனும் ஒரு பரீட்சார்த்தி தகுதியற்றவர் எனத் தெரியவருமிடத்து பரீட்சைக்கு முன்னர் அல்லது பரீட்சை நடைபெறும் போது அல்லது பரீட்சையின் பின்னர் எந்தவொரு சந்தர்ப்பத்திலும், அவரது பரீட்சார்த்த உரிமையை இரத்துச் செய்ய முடியும். விண்ணப்பதாரியினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள தகவல்கள் பிழையானவை என எப்போதாவது தெரியவருமிடத்து அவரை வடமேல் மாகாண சபை அரசாங்க சேவையிலிருந்து பதவிநீக்க முடியும்.

12. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி அல்லது அத் திகதிக்கு முன்னர் குறித்த பரீட்சைக் கட்டணத்தைச் செலுத்தி அதற்குரித்தான பற்றுச்சீட்டுடன் நிவர்த்தியாக பூரணப்படுத்தி அனுப்பி வைத்துள்ள விண்ணப்பங்களை பரிசோதித்து, இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ள பதவிகளுக்குரிய தகைமைகளை கொண்டிருக்கும் விண்ணப்பதாரிகளுக்கு மட்டும், வடமேல் மாகாண சபை அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் பரீட்சை அனுமதி அட்டைகள் வழங்கப்படும். விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகளை அனுப்பப்பட்ட உடனேயே வடமேல் மாகாண சபையின் (www.psc.nw.gov.lk) என்ற இணையத்தளத்தில் அறிவித்தலொன்று பிரசுரிக்கப்படும். பரீட்சை நடைபெறுகின்ற தினத்திற்கு 03 நாட்களுக்கு முன்னர் பரீட்சை அனுமதிப் பத்திரம் கிடைக்கப்பெறாது விடின், உடனடியாக வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பரீட்சைப் பிரிவிற்கு தெரிவிக்கப்படல் வேண்டும்.

13. போட்டிப் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக அனுமதிப் பத்திரம் வழங்கப்படுவதானது விண்ணப்பதாரி இந்த பதவிக்கு தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ளார் என ஏற்றுக்கொண்டதாக கருதப்பட மாட்டாது. தகைமைகளை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான கடித ஆவணங்களின் மூலப் பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பதவிக்கு உரித்தான சகல தகைமைகளையும் விண்ணப்பம் கோரும் இறுதித் திகதி அல்லது அதற்கு முன்னர் பூர்த்தி செய்திருத்தல் கட்டாயமானதாகும்.

**14. பரீட்சார்த்தியின் ஆளடையாளம் :**

பரீட்சார்த்தி தாம் தோற்றுகின்ற சகல பாடங்களிற்கும் தமது ஆளடையாளத்தை பின்வரும் ஆவணங்களின் மூலம் பரீட்சை மண்டபப் பொறுப்பாளரிடம் நிரூபிக்க வேண்டும் :

(அ) ஆட்களை பதிவு செய்யும் ஆணையாளரினால் வழங்கப்பட்ட தேசிய ஆளடையாள அட்டை.

அல்லது

(ஆ) செல்லுபடியாகும் கடவுச் சீட்டு / செல்லுபடியாகும் இலங்கை சாரதி அனுமதிப் பத்திரம்.

*குறிப்பு:* பரீட்சை மண்டபத்தில் தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு பரீட்சார்த்தி தவறும்பட்சத்தில் அவர் பரீட்சைக்குத் தோற்றுவதற்கு தகுதியற்றவராகக் கருதப்படுவார்.

15. இப்பரீட்சையை நடாத்துதல் அல்லது நடத்தாதிருத்தல், பிற்போடல் தொடர்பான அல்லது நடாத்தியதன் பின்னர் தேர்ந்தெடுத்தல் அல்லது வெற்றிட எண்ணிக்கைகள் தொடர்பிலான இறுதித் தீர்மானம் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அதிகாரத்தில் உள்ளது. அதேபோன்று இந்த அறிவித்தலில் ஏற்பாடுகளாக குறிப்பிடப்படாத ஏதேனும் ஒரு விடயம் காணப்படுமாயின், அது தொடர்பில் வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் விசாரித்து வடமேல் மாகாண கௌரவ ஆளுநரினால் முடிவுகள் எடுக்கப்படும்.

16. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் வெளியிடப்படும் இவ்வறிவித்தலில் மொழிப் பதங்களுக்கிடையே ஏதேனும் பொருத்தப்பாடின்மை மற்றும் ஒவ்வாமை இருப்பின் அவ்வாறான சந்தர்ப்பங்களில் சிங்கள மொழி மூல அறிவித்தலே சரியானதாக கருத்தில் கொள்ளப்படும்.

வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமத்திற்கு ஏற்ப,

என்.எம்.ஜே. பிரனாந்து,
செயலாளர்,
வடமேல் மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழு,
மாகாண சபை அலுவலக கட்டிடத் தொகுதி,
குருநாகல்.

2025, யூன் 26.

மாதிரி விண்ணப்பப்படிவம்.

அலுவலக உபயோகத்திற்காக

**வடமேல் மாகாண அரசாங்க சேவையின் இலங்கைத் தொழில்நுட்ப சேவையில்**
**தொழில்நுட்ப உத்தியோகத்தர் (சிவில்) / திட்டமிடல் கலைஞர் (ஒரு வருட பயிற்சித் தரம்) பதவிக்கு**
**நிரந்தர அடிப்படையில் உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த போட்டிப் பரீட்சை - 2025**

பரீட்சைக்குத் தோற்றும் மொழி மூலம் ( உரிய கூட்டினுள் √ அடையாளத்தை இடுக )

சிங்களம் ☐ தமிழ் ☐ ஆங்கிலம் ☐

| *விண்ணப்பிக்கும் பதவி / பதவிப் பெயர்* | *குறியீட்டு எண்* |
|---|---|
| | |
| | |
| | |
| | |

1. 1.1 முதலெழுத்துக்களுடன் பெயர் ( சிங்களம் / தமிழில்) :
திரு./திருமதி/செல்வி.......................................................................................................

1.2 முதலெழுத்துக்களுடன் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :
Mr./Miss/Mrs./ .......................................................................................................
.......................................................................................................

1.3 முழுப் பெயர் ( சிங்களம் / தமிழில்) :
திரு./திருமதி/ செல்வி.........................................................................................................................
...........................................................................................................................................................

1.4 முழுப் பெயர் (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :
Mr./Miss/Mrs./.....................................................................................................................................
...........................................................................................................................................................

1.5 தேசிய ஆளடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | |

2. 2.1 நிரந்தர முகவரி ( சிங்களம் / தமிழில் ) :
...........................................................................................................................................................
...........................................................................................................................................................
...........................................................................................................................................................
...........................................................................................................................................................

2.2 நிரந்தர முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :
...........................................................................................................................................................
...........................................................................................................................................................
...........................................................................................................................................................
...........................................................................................................................................................

2.3 அனுமதிப் பத்திரம் அனுப்ப வேண்டிய முகவரி (ஆங்கில கெப்பிடல் எழுத்துக்களில்) :
...........................................................................................................................................................
.................................................................................................................................................

2.4 தொலைபேசி இலக்கம் : ................................................ WhatsApp இலக்கம் : ........................................

2.5 மின்னஞ்சல் முகவரி (email) : ..............................................................................................................

3. 3.1 பால் : பெண் ☐ ஆண் ☐

3.2 பிறந்த திகதி : ஆண்டு ☐☐☐☐ மாதம் ☐☐ திகதி ☐☐

3.3 2025.07.25 ஆந் திகதிக்கு வயது : வருடங்கள் ☐☐ மாதங்கள் ☐☐ நாட்கள் ☐☐

4. 4.1 விண்ணப்பதாரி வதியும் நிர்வாக மாவட்டம் : ....................................................

4.2 பிரதேச செயலாளர் பிரிவு : ....................................................................

4.3 கிராம அலுவலர் பிரிவு : ..........................................................................

4.4 2025.07.25 ஆந் திகதிக்கு வடமேல் மாகாண நிர்வாகப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவுக் காலம்.:
ஆண்டுகள் ............. மாதங்கள் ............ நாட்கள் ..........

5. கல்வி மற்றும் தொழில் தகைமைகள் :

5.1 க.பொ.த. (சா/த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் -
பரீட்சை ஆண்டு : ..................... மாதம் : .................. சுட்டெண் : .................................

| | *பாடம்* | *பெறுபேறு* | | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|---|---|---|
| 1. | | | 6. | | |
| 2. | | | 7. | | |
| 3. | | | 8. | | |
| 4. | | | 9. | | |
| 5. | | | 10. | | |

5.2 க.பொ.த. (உ/த.) பரீட்சை தொடர்பான விபரங்கள் -
பரீட்சை ஆண்டு : ………………… மாதம் : ……………… சுட்டெண் : ……………………………

| | *பாடம்* | *பெறுபேறு* |
|---|---|---|
| 1. | | |
| 2. | | |
| 3. | | |
| 4. | | |

5.3 தொழில் தகைமைகள் :

| *நிறுவனம்* | *கற்ற பாடநெறி* | *கால எல்லை* | *பெறுபேறு* | *சான்றிதழ் இலக்கம் மற்றும் திகதி* |
|---|---|---|---|---|
| | | | | |
| | | | | |
| | | | | |

6.0 பரீட்சைக் கட்டணம் செலுத்தியமை தொடர்பான விபரங்கள் -

6.1 பற்றுச் சீட்டு இலக்கம் : ………………………… தொகை : ……………………………திகதி : ………………………………
கட்டணம் செலுத்திய பிரதேச செயலகம் ………………………………………………………………………………

| பற்றுச்சீட்டை இங்கே ஒட்டவும். |
|---|

7.0 விண்ணப்பதாரியின் உறுதியுரை :

(அ) இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் ஏற்றவாறு உண்மை என உறுதிப்படுத்துகிறேன். இங்கு ஒரு பகுதி பூரணப்படுத்தப்படாமை மற்றும் பிழையாக பூரணப்படுத்துவதால் ஏற்படக் கூடிய நட்டங்களை ஏற்றுக் கொள்வதற்கு உடன்படுகிறேன்.

(ஆ) என்னால் வழங்கப்படும் உறுதியுரை பொய்யானது என உறுதிப்படுத்தப்பட்டால் பதவிக்கு நியமனம் பெறுவதற்கு முன்னர் தகுதியற்றவராவேன் என்பதையும், பதவிக்கு நியமிக்கப்பட்ட பின்னால் பதவியில் இருந்து நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

………………………………..
திகதி

…………………………………………………..
விண்ணப்பதாரியின் கையொப்பம்

8.0 விண்ணப்பதாரரின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் :

விண்ணப்பத்தில் விண்ணப்பதாரியின் கையொப்பம் அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபர்/ ஓய்வுபெற்ற நிறுவனத் தலைவர்/ பிரிவின் கிராம அலுவலர்/ சமாதான நீதவான்/ சத்தியப் பிரமாண ஆணையாளர்/ சட்டத்தரணி/ நொத்தாரிசு ஒருவர்/ முப்படையின் அதிகாரி/ பொலிஸ் சேவையின் வர்த்தமானியில் இடப்பட்ட பதவி ஒன்றை வகிக்கும் ஒரு உத்தியோகத்தர் அல்லது ரூ. 71,240.00 க்கு மேற்பட்ட ஆரம்ப அடிப்படை மாதச் சம்பளத்தைப் பெற்றுக் கொள்ளும்

நிரந்தரமான அரசாங்க மாகாண அரசாங்க சேவையின் பதவி நிலை அதிகாரி ஒருவர் அல்லது பௌத்த விகாரை ஒன்றின் பொறுப்பாளர் பிக்கு அல்லது ஒரு தலைமை பௌத்த பிக்கு அல்லது வேறு எந்த மதத்தின் வழிபாட்டுத் தலத்திலும் பதவியில் இருப்பவர் மூலம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

இந்த விண்ணப்பத்தை முன்வைக்கும் திரு./ திருமதி/ செல்வன்/ செல்வி ............................................................. என்பவரை நான் தனிப்பட்ட முறையில் அறிவேன் என்பதையும், அவர் ........................ ஆம் திகதி என் முன்னிலையின் கையொப்பமிட்டார் என்பதையும் உறுதி செய்கிறேன்.

கையொப்பம் : ......................................................................

உறுதிப்படுத்துபவரின் பெயர் : ......................................................................

பதவி, உத்தியோகபூர்வ முத்திரை : ......................................................................

திகதி : ......................................................................

07 - 610

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ்க் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்பட மாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

**அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்களை ஏற்றுக்கொள்வார்.**

**முக்கிய கவனிப்பு. -** இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான கட்டணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்.**

**அட்டவணை - 2025**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | - | வெள்ளி | 04.07.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 20.06.2025 |
| | | வெள்ளி | 11.07.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 27.06.2025 |
| | | வெள்ளி | 18.07.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 04.07.2025 |
| | | வெள்ளி | 25.07.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 11.07.2025 |
| **ஓகத்து** | - | வெள்ளி | 01.08.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 18.07.2025 |
| | | வியாழன் | 07.08.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 25.07.2025 |
| | | வெள்ளி | 15.08.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 01.08.2025 |
| | | வெள்ளி | 22.08.2025 | - | நண்பகல் 12 | வியாழன் | 07.08.2025 |
| | | வெள்ளி | 29.08.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 15.08.2025 |
| **செத்தெம்பர்** | - | வியாழன் | 04.09.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 22.08.2025 |
| | | வெள்ளி | 12.09.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 29.08.2025 |
| | | வெள்ளி | 19.09.2025 | - | நண்பகல் 12 | வியாழன் | 04.09.2025 |
| | | வெள்ளி | 26.09.2025 | - | நண்பகல் 12 | வெள்ளி | 12.09.2025 |

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.